**செய்தி குறிப்பு எண்.63** **நாள்: 19.10.2009**

**பத்திரிக்கைச் செய்தி**

19.10.2009 நாளிட்ட தினமணி நாளிதழில் வேளாண் துறையில் முறைகேடு என்ற தலைப்பில் வேளாண்மைத்துறையில் ஊதியம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும், 6வது ஊதியக்குழு பரிந்துரைகள் அமலாக்கப்படவில்லை எனவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊழியர்களிடமிருந்தோ, ஓய்வு பெற்ற பணியாளர்களிடமிருந்தோ இதுவரை எவ்வித புகாரும் வரவில்லை.

உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு உற்பத்தியை பெருக்க வேண்டியது அரசின் கடமை என்பதால், அவ்வப்போது கண்டறியப்படும் வேளாண் தொழில் நுட்பங்கள் விரைவில் விவசாயிகளை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு துறையில் நடைமுறையில் இருந்த மூன்றடுக்கு நிர்வாக அமைப்பு இரண்டு அடுக்கு நிர்வாக அமைப்பாக மாற்றி மறு சீரமைப்பு செய்யப்பட்டது. இதன்படி வேளாண்மை மற்றும் அதன் சகோதர துறைகளான, தோட்டக்கலை, விதை சான்றளிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறைகளில் தொழில் நுட்பங்கள் அனைத்தும் ஒன்றிய அளவில் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு தாமதமின்றி கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களும் ஒரே இடத்தில் வட்டார / ஒன்றிய அளவில் கிடைப்பதால் துறை மறு சீரமைப்பு விவசாயிகளிடையே பெருமளவில் வரவேற்பை பெற்றுள்ளது.

மறு சீரமைப்பு செய்யப்பட்ட பின் வட்ட அளவில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊதியம் மற்றும் பயணப்படிகள் ஆகிய நிர்வாக நடைமுறைகள் மாவட்ட அளவிலான வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டது. வட்ட அளவில் பணியாற்றி வந்த அமைச்சுப்

பணியாளர்கள் மாவட்ட அளவில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டு போதுமான அளவில் பணியாளர்கள் உள்ளனர். பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ள செய்தி குறித்து அனைத்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலர்களிடம் விசாரிக்கப்பட்டதில், மாதத்தின் இறுதி நாளில் வழங்கப்பட வேண்டிய ஊதியம் எவ்வித காலதாமதமும் இன்றி வழங்கப்படுவதாகவும், 6வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு நிலுவைத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளனயெனவும், பொது சேமநல நிதியிலிருந்து முன் பணம் வழங்கக் கோரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பலன்களும் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றனயெனவும் மாவட்ட அலுவலர்களிடம் இருந்து தகவல் பெறப்பட்டது. இதுகுறித்து பணியாளர்களிடமிருந்து எவ்வித புகாரும் துறைக்கு வரவில்லை. காலதாமதம் ஏதுமின்றி உடனுக்குடன் வழங்கப்படுவதை கண்காணிக்குமாறு அனைத்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**வீரபாண்டி எஸ். ஆறுமுகம்**
வேளாண்மைத்துறை அமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.